# 6ஆம் ஆண்டு நினைவு : ஆருயிர்த் தலைவர் கலைஞர் துயிலுமிடம் நோக்கி - திராவிட நாயகர் திக்கெட்டும் புகழ்சேர்க்கும் உழைப்பின் சிகரம் முதல்வர் தலைமையில் பேரணியாய்ச் செல்லும் காட்சி!



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 6வது ஆண்டு நினைவு நாளையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (7.8.2024) சென்னை, அண்ணா சாலை, ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச்சிலை அருகிலிருந்து புறப்பட்டு, காமராஜர் சாலையில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடம் வரை அமைதிப் பேரணி நடைபெற்றது. இப்பேரணியில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.